செ.வெ.எண்: 21 நாள்: 10.08.2021

பத்திரிக்கைசெய்தி

நாகப்பட்டினம் மாவட்டத்தில் நரிக்குறவர்/சீர்மரபினர் இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு நரிக்குறவர்/சீர்மரபினர் நலவாரியத்தில் உறுப்பினராக சேரகோருதல்

நாகப்பட்டினம் மாவட்டத்தில் நரிக்குறவர் இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு நரிக்குறவர் (ம) சீர்மரபினர் நலவாரியத்தில் 18 வயது முதல் 60 வயதுவரை உள்ள ஒவ்வொருவரும் உறுப்பினர்களாக பதிவுசெய்து கொள்ளலாம். இவ்நலவாரியத்தில் உள்ள உறுப்பினர்கள் விபத்தினால் மரணம் ஏற்பட்டால் உதவித்தொகை ரூ.1,00,000/-வழங்கப்படும். விபத்தினால் ஊனம் ஏற்பட்டால் ஊனத்தின் தன்மைக்கேற்ப ரூ.10,000/-முதல் ரூ.1,00,000/-வரையும் உறுப்பினரின் இயற்கை மரணத்திற்கான உதவித்தொகை ரூ.20,000/- ஈமச்சடங்கு செலவிற்கான உதவித்தொகை ரூ.5,000/-மேலும் மாணவ/மாணவிகளுக்கும் கல்வி உதவித்தொகை மற்றும் ஊக்கத்தொகைகளும் இவ்வாரியத்தின் மூலம் வழங்கப்படுகிறது. எனவே நரிக்குறவர்/சீர்மரபினர் நலவாரியங்களில் இதுவரை உறுப்பினர்களாக பதிவு செய்யாதவர்கள் நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இரண்டாம் தளத்தில் அறை எண்.222-இல் உள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தை அணுகி உடனடியாக பதிவு செய்து மேற்காணும் நலத்திட்ட உதவிகளை பெற்று பயனடையுமாறு, **நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக்கொள்கிறார்.**

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**